## திருத்துறைப்பூண்டி நகராட்சி

### அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 29.12.2021 புதன் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை திரு.எஸ். ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 01 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு மேலாண்மை வரைவு உப விதிகள் இந்நகராட்சியில் செயல்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநரக முதன்மை தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.21978-9/2020/பாசாதி-2, நாள்.31.12.2020படியும் வரைவு துணை விதிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி உபவிதிகள் திருவாரூர் மாவட்ட அரசிதழில் 11.08.2021ம் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டது. 21.11.2021ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் பொது மக்களிடம் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை கோரப்பட்டது. அதன் மீது எவ்வித ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெறப்படவில்லை.<br>எனவே மேற்படி உபவிதிகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று இறுதி செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண்.3770/2018/இ1)** | **394** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.** |

ஒம்/ எஸ். ரவிச்சந்திரன்,
ஆணையர் (ம) தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/

**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.12.2021** வெள்ளிக் கிழமை **தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.எஸ். ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| **01** | நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர்-2021 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | **395** | **பதிவு செய்யப்பட்டது** |
| **02** | இந்நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த எட்டு வாகனங்களுக்கு தஞ்சாவூர் தானியங்கி பொறியாளர் அரசு தானியங்கி பணி மனை அவர்களிடம் வாகனங்களுக்கு மதிப்பீடு சான்று பெற்று திருவாரூர் மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் மூலம் தினக் கதிர் நாளிதழ் மூலம் 12.10.2021-ல் ஏலம் அறிவிப்பு செய்யப்பட்டது. இதற்கான தொகை ரூ.2500/- (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்குவதற்கு மன்றப் பொருள் அனுமதிக்கு.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br><br>**2.** நகராட்சியின் நலன் கருதி பழுதடைந்த எட்டு வாகனங்களுக்கு தானியங்கி பொறியாளர் தஞ்சாவூர் அவர்களின் மதிப்பீடு பெற்று ஏலம் | **396** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.** |

<table>
<tr><td></td><td>விடப்பட்டதை மன்றம் அனுமதிக்கு<br><u>(ந.க.எண் 1760/2021/எச்1)</u></td><td></td><td></td></tr>
<tr><td>03</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சி கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு மேலாண்மை வரைவு உபவிதிகள் இந்நகராட்சியில் செயல்படுத்திட திருவாரூர் மாவட்ட அரசிதழில் 11.10.2021ம் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டது. 21.11.2021 தேதிய தினத்தந்தி நாளிதழில் பொதுமக்களிடம் ஆட்சேபணை மற்றும் ஆலோசனை கோருவதற்கான விளம்பரம் வெளியிடப்பட்டது. இதற்கான கட்டண தொகைகள் கீழ்க்கண்ட விவரப்படி வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விளம்பரம் வெளியிடப்பட்டதேதி</th><th>கட்டணத் தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>அரசுஅச்சகம், புதுக்கோட்டை</td><td>11.10.2021 (திருவாரூர் மாவட்ட அரசிதழ்)</td><td>88,200</td></tr>
<tr><td>2.</td><td>தினத்தந்தி</td><td>21.11.2021</td><td>17,464</td></tr>
<tr><td></td><td></td><td>கூடுதல்</td><td>1,05,664</td></tr>
</table>
அலுவலககுறிப்பு:<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி திருவாரூர் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கான தொகை ரூ.88,200 தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண்:3770/2018/இ1</u></td><td>397</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .</td></tr>
<tr><td>04</td><td>கலைஞர் மேம்பாட்டுதிட்டம் 2021-22-ல் (KNMT) திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2.613 கி.மீ. மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக அமைக்கும் பணிக்கு ஒப்புந்தப்புள்ளிகள் கோருவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாலை முரசு தமிழ் நாளிதழ் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளிதழ் ஆகியவற்றில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான கட்டண தொகை ரூ.45110/- கீழ்க்காணும் விவரப்படி ஃபிளேம் அட்வர்டைசிங்</td><td>398</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>கம்பெனி (பி) லிட்., சென்னை நிறுவனத்திற்கு வழங்கிடவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் திட்டநிதி பெறப்பட்டவுடன் அந்நிதியிலிருந்து இச்செலவினத்தை ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>வெளியிடப்பட்டதேதி</th><th>கட்டணத் தொகை ரூ.</th></tr><tr><td>1.</td><td>மாலை முரசு</td><td>21.11.2021</td><td>19200/-</td></tr><tr><td>2.</td><td>டைம்ஸ் ஆப் இந்தியா</td><td>21.11.2021</td><td>24048/-</td></tr><tr><td></td><td>ஜி.எஸ்.டி. 5 சதவிகிதம்</td><td></td><td>2162/-</td></tr><tr><td></td><td>கூடுதல்</td><td></td><td>45410/-</td></tr></table><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1961/2021/இ1)<br><u>ந.க.எண்:1961/2021/இ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>05</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தகவல் தொழில் நுட்ப மின்னணு சேவை வழங்கல் துணை விதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு புதுக்கோட்டை அரசு அச்சகத்திற்கு கட்டண தொகையாக ரூ.6300 வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விளம்பரம் வெளியிடப்பட்ட தேதி</th><th>கட்டணத் தொகை ரூ.</th></tr><tr><td>1.</td><td>அரசுஅச்சகம், புதுக்கோட்டை</td><td>22.12.2021 (திருவாரூர் மாவட்ட அரசிதழ்)</td><td>6300.00</td></tr><tr><td></td><td></td><td>கூடுதல்</td><td>6300.00</td></tr></table></td><td>399</td><td>அங்கீகரிக்கப்பட்டது .</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அலுவலககுறிப்பு: 1.மன்றம் அனுமதிவழங்கலாம்<br>2.பணியின் அவசர அவசியம் கருதி திருவாரூர் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கான தொகை ரூ.6300.00 தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்:2646/2021/இ1** | | |
| **06** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நடைபெறும் திட்டப் பணிகள் குறித்த விளம்பரம் தமிழ்நாடு அரசின் 100 நாள் சாதனை விளம்பர மலரில் தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களில் கீழ்காணும் விவரப்படி வெளியிடப்பட்டது. அதற்கான கட்டணத் தொகை ரூ.52,500/- இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1511/2021/இ1** | **400** | **அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விளம்பரம் வெளியிடப்பட்ட நாள் | கட்டணத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினகரன் | 14.08.2021 | 29,400 |
| 2. | தினத்தந்தி | 15.08.2021 | 23,100 |
| | | கூடுதல் | **52,500** |

<table>
<tr>
<td>07</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் புஸ்காட் நகராட்சியின் பகுதியில் சிறு தெருக்களுக்கு செல்ல வேண்டி இருப்பதால் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையின் நலன் கருதியும் புஸ்காட் வாகனத்தின் பழுதுகளை உடன் சீர் செய்தும் வழங்கிட கீழ்க்கண்டவாறு மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி வரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின்<br>பெயர் (திருவாளர்கள்)</th><th>கட்டணத் தொகை<br>ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>திரு.சோ.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர்<br>எண்.282,திருவாரூர்ரோடு, திருத்துறைப்பூண்டி</td><td>6600.00</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி.எஸ்.மங்கையர்க்கரசி,<br>அரசுஒப்பந்ததாரர்,<br>3/429,மடப்புரம், திருத்துறைப்பூண்டி</td><td>7650.00</td></tr>
<tr><td>3.</td><td>திரு.பி.கண்ணன்,<br>முதல்நிலை ஒப்பந்ததாரர்,<br>27சி,ராமமடத்தெரு, திருத்துறைப்பூண்டி</td><td>8000.00</td></tr>
</table>
<br>
மேற்படி வரப்பட்டுள்ள விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.சோ.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், எண்.282, திருவாரூர் ரோடு, திருத்துறைப்பூண்டி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றப்பொருள் அனுமதித்து வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
<br>
அலுவலககுறிப்பு:<br>
1. அனுமதிக்கலாம்<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அனுமதி பெற்று பழுதுகள் நீக்கம் செய்ய வாகனம் ஒன்றுக்கு ரூ.6600/- பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
<br><br>
<u>ந.க.எண்:2268/2021/எச்1</u></td>
<td>401</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது<br>.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **08** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் பிரிவுக்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தள்ளு வண்டிகள் (புஸ்காட்) 20 எண்ணிக்கை வண்டிகளுக்கு டயர்கள் மற்றும் பழுது அடைந்துள்ள பொருட்கள் சீர் செய்ய உத்தேச செலவினம் ரூ.2,00,000/- ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ஆகும். இதனை நகராட்சியின் பொதுநிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டபடுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி நலன் கருதியும் பொது சுகாதாரம் பயன்பாட்டுக்கு 2020-2021ம் ஆண்டுக்கு மன்ற தீர்மான எண்.181 நாள்.30.06.2021ல் ரூ.8.00 இலட்சம் நிர்வாக அனுமதி பெறப்பட்டது மன்றம் அனுமதிக்கு.<br><br>**<u>ந.க.எண்:2268/2021/எச்1</u>** | **402** | **அனுமதிக்கப்பட்டது.** |
| **09** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2021-22 திட்டத்தின்கீழ் புதிய பேருந்து நிலையம் அருகில் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறி அங்காடி அமைக்கும் பணிக்கான நிர்வாக அனுமதி பெறுவதற்கு மதிப்பீடுகள், வடிவமைப்பு, திட்ட வரைபடம், AUTO CAD வரைபடங்கள் மற்றும் அது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அல்லது திட்ட மதிப்பீட்டிலிருந்து செலவு செய்யவும் நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**<u>ந.க.எண்:1784/2021/இ1</u>** | **403** | **அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr>
<td>10</td>
<td>
இந்நகராட்சியின் குடிநீர் பிரிவு பணிகளான குடிநீர் வால்வு திறத்தல், மின் மோட்டார்கள் இயக்குதல், குடிநீர் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர் டேங்கரில் உதவியாளர் ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாட்கள் நியமிக்க 17.08.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணி விவரம்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலை விவரம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td rowspan="3">குடிநீர் பிரிவு பணிகளை பார்ப்பதற்கு தினக்கூலி அடிப்படையில் பணியாட்கள் நியமித்தல்</td><td>எஸ்.மங்கையர்க்கரசி</td><td>385/-</td></tr>
<tr><td>2</td><td>எஸ்.மாரியம்மாள்</td><td>400/-</td></tr>
<tr><td>3</td><td>பி.கண்ணன்</td><td>420/-</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையர்க்கரசி ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>
<br>
<u>ந.க.எண்:1358/2018/இ1</u>
</td>
<td>404</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>11</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண் 2 பால்ராஜ் நகர் சாலை கடந்த மழைக்காலங்களில் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி சாலையை பொதுமக்கள் நலன் கருதி மேம்படுத்தி பேவர் பிளாக் சாலையாக புதிதாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.30இலட்சத்திற்கு(ரூபாய் நான்கு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணியினை Untied Grant 2021-2022 நிதி பெற்று அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>ந.க.எண்: 2378/2021/இ1</u></td><td>405</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>12</td><td>இந்நகராட்சியில் நவீன வரி வாயு தகனமேடை பணி முடிவடைந்து 19.05.2021 அன்று பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எரிவாயு தகன மேடையை டிசம்பர்-2021 வரை நகராட்சியால் பராமரிக்கவும், 01.01.2022 முதல் தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கவும் முடிவு செய்து நகர்மன்றத் தீர்மானம்எண் 356 நாள் 30.07.2021-ன்படி ஒப்புதல் பெறப்பட்டு இதற்கான அறிவிப்பு 05.10.2021-ல் வெளியிடப்பட்டது. பராமரிக்கும் நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்திட அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிப்பதற்கான நிபந்தனைகள்</u><br><br><table><tr><td>1.</td><td>எரிவாயு மயானக்காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களும் நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக் கூடாது. எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்க இயலாது.</td></tr><tr><td>2.</td><td>ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை பயன்படுத்தக்கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும்</td></tr></table></td><td>406</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | இதர விதிமுறைகளுக்கும் அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும். | | |
| | | 3. | மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப் பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனவே முழுப்பொறுப்பாகும். | | |
| | | 4. | எரியூட்டும் இயந்திர புகைப்போக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசுக்கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும். | | |
| | | 5. | தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய அனுமதி தேவைப்படும் என கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லா சான்றுகள் நகராட்சி தனது சொந்த பொறுப்பில் பெற்றுக்கொடுக்கப்படும். | | |
| | | 6. | எரிவாயு தகன மேடை கட்டிடத்திற்குண்டான மின் கட்டணத்தினை அறக்கட்டளை/ தொண்டு நிறுவனமே மின் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். | | |
| | | 7. | ஒரு சடலம் எரியூட்டுவதற்கு ரூ.2500/- பெற்றுக்கொள்ளவும், அதில் சடலம் ஒன்றுக்கு ரூ.250/-ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும். | | |
| | | 8. | ஜாதி, மத ,இன வேறுபாடு இன்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும். | | |
| | | 9. | எரிவாயு மயானத்தினை சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தைச் சுற்றி மதில் சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை/ நிறுவனமே ஏற்க வேண்டும். | | |
| | | 10. | எரிவாயு மயானத்தில் அறக்கட்டளை/ தொண்டு நிறுவனம் மூலமாக எவ்வித கூரை வேய்ந்த கட்டிடமோ மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்க கூடாது. | | |
| | | 11. | எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சனைகளுக்கு அறக்கட்டளை/ தொண்டு நிறுவனமே முழு பொறுப்பேற்க வேண்டும். | | |
| | | 12. | முதன் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 3 வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பு அறக்கட்டளை/ தனியார் நிறுவனம் பராமரிக்க அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு | | |

| | |
|---|---|
| | தேவைப் படின் ஆறு மாத காலத்திற்கு முன்பாகவே சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். |
| 13. | பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்றே வேலைகள் செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும்போது இதற்கு எவ்வித இழப்பீடும் நகராட்சி வழங்காது. |
| 14. | அறக்கட்டளை/ நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு ஆறுமாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்கப்பட வேண்டும். |
| 15. | பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் நகராட்சியின் முடிவை பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட தனியார் அறக்கட்டளை/ தனியார் நிறுவனங்கள் தாங்கள் நிறுவின அனைத்து கூடுதல் நிறுவனங்கள்/ கட்டிடங்களுக்கு எந்தவித இழப்பீடும் கோராமல் நகராட்சிக்கு நிறுவனத்தினர் ஒப்படைக்க வேண்டும். |
| 16. | எரிவாயு மயானம் அமைக்க உரிமம் பெற்ற தனியார்/ அறக்கட்டளை இறந்தவரின் பெயர், தகப்பனார்/ தாயார் பெயர், வயது, முகவரி, எரிவாயு மயானம் பயன்படுத்தப்பட்ட நாள் மற்றும் நேரம், பெறப்பட்ட தொகை முதலிய விவரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். மேற்படி பதிவேட்டினை நகராட்சி துப்புரவு ஆய்வாளர் காலமுறை ஆய்வு செய்ய வேண்டும். |
| 17. | மேற்கண்ட நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலோ புகார் நிரூபிக்கப்பட்டாலோ வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும். அறக்கட்டளை எவ்வித நஷ்ட ஈடும் கோராமல் எரிவாயு மயானத்தை இயக்கும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும். |
| 18. | மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப்பத்திரம் நகராட்சிக்கு அறக்கட்டளை/ நிறுவனம் எழுதிக்கொடுக்க வேண்டும். |

மேற்படி நிபந்தனைகளை ஏற்று CHILDRENS AND WOMEN DEVELOPMENT

| | | | |
|---|---|---|---|
| | TRUST, THIRUTHURAIPOONDI தொண்டு நிறுவனம் 30.11.2021-ல் ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளது. எனவே, மேற்கண்ட நிபந்தனைகளின்படி CHILDRENS AND WOMEN DEVELOPMENT TRUST, THIRUTHURAIPOONDI தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. 01.01.2022 முதல் மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கலாம்.<br>2. எரிவாயு தகன மேடை பயன்பாட்டின் அவசியம் கருதி மேற்கண்ட நிபந்தனைகளுடன் தகன மேடையை பராமரிப்பதற்கு CHILDRENS AND WOMEN DEVELOPMENT TRUST, THIRUTHURAIPOONDI என்ற நிறுவனம் அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண். 1482/2021/எச்1)** | | |
| **13** | இந்நகராட்சியில் இயக்கமில்லாமல் இருந்து வந்துள்ள (8) எட்டு வாகனங்களை ஏலம் விடுவதற்கு தனியங்கி பொறியாளர் அரசு தனியங்கி பணிமனை கோர்ட் ரோடு, தஞ்சாவூர் அவர்கள் மூலம் மதிப்பீடு நிர்ணயம் செய்து தர கோரி அரசு தானியங்கி பொறியாளர் அலுவலகத்திற்கு ஒரு வாகனத்திற்கு ரூ.750/- வீதம் (8) எட்டு வாகனத்திற்கு ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும் ) செலுத்தப்பட்டது இதனை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் தானியங்கி பணிமனை நிர்ணயம் ரூபாய்.6000/-ம் வழங்கியதை அனுமதிக்கலாம். | **407** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **ந.க.எண்:1760/2021/எச்1** | | |
| 14 | இந்நகராட்சியில் மூலதன மான்ய நிதி 2021-22ன்கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.20.50 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி (Minutes of Meeting of the 2nd Empowered Committee for Capital Grant Fund and O&M Gap Filling Fund 2021-22 held on 17.12.2021) ந.க.எண்.19089/2021/இ2 நாள்.24.12.2021ன்படி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள வார்டு எண்.5 திருவாரூர் ரோடு மற்றும் வார்டு எண்.8 காந்தி முதலியார் நகர் ஆகிய தெருக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்:2296/2021/இ1** | **408** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| 15 | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய தினசரி காய்கறி அங்காடி கட்டிடம் மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஆபத்து ஏற்படுத்தும் வகையில்உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியகட்டிடம் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய மார்க்கெட் கட்டிடம் கட்டித்தரும் வரை மாற்று இடம் தேர்வு செய்து வழங்க வேண்டும் என நகராட்சிக்கு எதிராக திருத்துறைப்பூண்டி ஸ்ரீ முள்ளாட்சி மாரியம்மன் நகர மார்க்கெட் தலைவர் திரு.ஆர்.கண்ணன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.24999 வழக்கு தொடரப்பட்டதற்கு நகராட்சி ஆணையர் சார்பாக மேற்படி வழக்கில் ஆஜராகி வக்காலத்து நாமா தாக்கல் செய்வது முதல் வழக்கினை நகராட்சிக்கு சாதகமாக முடித்துக்கொடுக்கும் வரை திரு.டி. இரவிச்சந்தர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்யப்பட்டதற்கும், வழக்கிற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.150000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது. | **409** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு:<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2. மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினங்களை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>**<u>ந.க.எண்:2373/2021/அ2</u>** | | |
| **16** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நவம்பர்-2021 மாதத்தில் பெய்த பெருமழை காரணமாக வார்டு 17 சிங்களாந்தி சாலை மற்றும் வார்டு 18 சிங்களாந்தி ஆதிதிராவிடர் தெரு ஆகிய பகுதிகளில் சாலைகள் சேதமடைந்துள்ளதை தற்காலிகமாக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.00இலட்சத்திற்கும் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**<u>ந.க.எண்: 2499/2021/இ1</u>** | **410** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

ஒம்/ திரு.எஸ். ரவிச்சந்திரன்,
ஆணையர்(ம) தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/